Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை: ரூபா 5-00

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 07 | [20 - 3 - 1993] | சனிக்கிழமை | ஓசை 30

## யாழ். குடிநீர் விநியோகம் விஸ்தரிக்கத் திட்டம்

யாழ். மாநகரசபையினால் யாழ்ப்பாணத்தில் குடிநீர் விநியோகம் பொது மக்களின் நன்மை கருதி விஸ்தரிக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேற்படி குடிநீர் விநியோகம் பற்றி யாழ். மாநகர சபை ஆணையாளர் விளக்குகையில்; யாழ். நகரில் முன்பு மின்சாரம் இருந்த போது சுமார் 9 ஆயிரம் மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்பொழுது பல நெருக்கடிகளின் மத்தியிலும் மின்சாரம் இல்லாதநிலையிலும் சுமார் 30 ஆயிரம் மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து தற்கால சூழ்நிலை நீடிக்கும் பட்சத்தில் மேலும் 30 ஆயிரம் மக்களுக்கு குடிநீர் கிடைக்கச் செய்வதற்கு தேவையான நடவடிக் [6 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலி, அல்லிப்பளை பகுதியில் 'புக்காரா' விமானத் தாக்குதல்

[தென்மராட்சி]

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான "புக்காரா" விமானம் ஒன்று நேற்றுக்காலை கிளாலி, அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதிகளை நோக்கி பாரிய குண்டு வீச்சு தாக்குதலை நிகழ்த்தியது.

நேற்றுக்காலை 9. 00 மணியளவில் அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியில் மூன்று தடவைகள் வட்டமிட்ட சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான புக்காரா விமானம் இரண்டு குண்டுகளை வீசியது. இக்குண்டுகள் கடற்பரப்பில் வீழ்ந்து வெடித்தன.

பின் இவ் விமானம் கிளாலி இறங்குதுறைப் பகுதியிலும் ஒரு குண்டை வீசியது. இக் குண்டு வீச்சுக்களினால் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

## அம்புலன்ஸ் விபத்து எவருக்கும் காயமில்லை

[நெல்லியடி]

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இருந்து கர்ப்பிணிப் பெண் ஒருவரை ஏற்றிக்கொண்டு யாழ். மருத்துவமனைக்கு வந்த மந்திகை வைத்தியசாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டி முன் ரயர் வெடித்ததினால் வீதியோரமுள்ள தென்னை மரத்துடன் மோதி முன்பகுதி சேதமடைந்தது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நீர்வேலிச் சந்திக்கருகில் இடம்பெற்றது.

விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்ற பருத்தித்துறை வைத்தியசாலை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு. ஆர். குழந்தைவடிவேல், கர்ப்பிணிப் பெண்ணையும் மற்றையோரையும் வேறொரு வாகனம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரைகள் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

தபாலகங்களுக்குத் தேவையான முத்திரைகள் வாதுவவில் எடுத்துவரப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல் நாயகம் தெரிவித்துள்ளார்.

சகல தபாலகங்களுக்கும் தேவையான முத்திரைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாகவும் இதனால் முத்திரைக்கு இதுவரை இருந்து வந்துள்ள தட்டுப்பாட்டை நீக்கியுள்ளதோடு பாவனையாளர்கள் சகல அஞ்சல் அலுவலகங்களிலும் முத்திரைகளை பெற்றுக் கொள்ளலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## வவுனியா கிராமங்கள் மீது தொடர்ந்து குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து இரண்டாவது நாளாக சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ச்சியான குண்டு வீச்சு தாக்குதல்களை நடாத்தின.

நேற்றுக்காலை 7.15 மணியளவில் வவுனியாவில் உள்ள மகிழங்குளம் கிராமத்தை பல தடவைகள் வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மூன்று குண்டு வீச்சு விமானங்கள் அடுத்தடுத்து எட்டுக் குண்டுகளை வீசின. இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்தபோதிலும் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

மேற்படி குண்டுகள் வீழ்ந்து வெடித்தபோது பத்து மைல் சுற்றளவிற்கு அதிர்வு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வடபகுதி உணவுப் பொருள் $16\frac{1}{2}$ கோடி ரூபா மோசடி

### - பிரட்மன் வீரக்கோன் தகவல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வடபகுதிக்கென அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களில் சுமார் 16 கோடியே 60 லட்சம் ரூபா வரை மோசடி செய்யப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

கொழும்பில் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் அரசாங்கஅதிபரும்கொழும்பில் இரகசியப் பொலீசாரும் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

## படகு உரிமையாளர் கூட்டம்

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று முற்பகல் 10-00 மணிக்கு கிளாலிப்படகுத்துறைக்கு வருகைதருமாறு யாழ். மாவட்ட வருவாய்ப்பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## தேவையான மண்ணெய் அனுப்பப்பட்டதாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தேவையான அளவு மண்ணெண்ணெய் யாழ். அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் அரச அதிபரின் கோரிக்கைக்கு இணங்க இம்முறை சென்ற கப்பலிலும் மண்ணெண்ணெய் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## கிளாலிக் கடற்கரையில் இரு சடலங்கள் ஒதுங்கின

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்கரையில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் இனம் தெரியாத இரு ஆண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின.

கிளாலிக் கடற்பரப்பில் சென்ற வியாழன் அன்று இரவு சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட படகுகள் மீதான துப்பாக்கி பிரயோகத்தில் இறந்தவர்களின் சடலமாக இது இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது. (86)

## தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள சிவகடாட்சம் அன் கம்பனி என்ற வர்த்தக நிலையமே இக் தீ விபத்தில் சேத

### பலாலி, கட்டைக்காடு முகாம்களிலிருந்து

## மக்கள் குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியான ஷெல் வீச்சு

(வடமராட்சி)

கட்டைக்காடு பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் நிலைகளிலிருந்து மக்கள் குடி

அதேவேளை நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலி

பலாலியிலிருந்து ஏவிவிடப்பட்ட ஆட்லறி ஷெல்கள் தொண்டமானாறு, பத்தை

### பூநகரி, வெற்றிலைக்கேணி

## இராணுவ முகாமில்

(வடமராட்சி)

கட்டைக்காடு பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் நிலைகளிலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை இலக்கு வைத்து இரவு பகலாக அகோர ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கட்டைக்காட்டு இராணுவ நிலைகளில் இருந்து நேற்று முன் தினம் மாலை முதல் நேற்று காலைவரை தொடர்ச்சியாக அப்பகுதிக் குடியிருப்புக்களை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டதோடு, பலத்த குண்டுச் சத்தங்களும் இடைவிடாது கேட்டவண்ணமிருந்தன. வடமராட்சி கிழக்குப் பகுதிக் குடியிருப்புக்களை இலக்குவைத்து சுமார் பதினைந்து மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடைபெற்றன.

அத்தேவேளை நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஒரு மணித்தியாலமாக பதினைந்துக்கு மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் அப்பகுதி குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவிவிடப்பட்டன.

பலாலியிலிருந்து ஏவிவிடப்பட்ட ஆட்லறி ஷெல்கள் தொண்டமானாறு, பத்தைமேனி, வளலாய்ப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக அறிய முடிகிறது. எனினும் சேத விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. [யோ]

## யாழ். கரைநோக்கி எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்றுக்காலை 9.45 மணி அளவில்மண்டைதீவுசிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து யாழ். கரையோரப்பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐந்து நிமிடங்கள் இடைவிட்டு மூன்று எறிகணைகள் இப்பகுதியைநோக்கி வீசப்பட்டன.

எறிகணைகள் அலுப்பாந்தி, சிறுத்தீவு, பண்ணைக் கடலேரி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனையடுத்து பீதியடைந்த குருநகர், சின்னக்கடை நகர்ப்புற மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் எறிகணைகள் விழாததால் உயிர், உடைமைச்சேதங்கள் ஏற்படவில்லை. (21)

உள்ள சிவகடாட்சம் அன் கம்பனி என்ற வர்த்தக நிலையமே இத் தீ விபத்தில் சேதமடைந்துள்ளது.

## இடமாற்றம் ரத்து

வன்செயல் காரணமாக தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தீவகப் பாடசாலைகளில் இதுவரை கற்பித்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டு தற்காலிகமாக கற்பித்து வந்தசில ஆசிரியர்களின் இடமாற்றங்கள் 01-03 1993 தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் 01-03-1993 தொடக்கம் முன்னைய நிரந்தரப் பாடசாலைகளில் கடமையை ஏற்று அது தொடர்பாக கடமையேற்றல் கடிதங்களை உரிய கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இயக்கச்சி பகுதியில் விமானங்கள் நோட்டம்

இயக்கச்சி பகுதிக்கு நேற்று காலை 7 மணியளவில் வந்த சிறிலங்கா அரசிற்கு சொந்தமான குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இயக்கச்சி மற்றும் அயல் கிராமப் பகுதிகளை இலக்கு வைத்து விமானங்கள் நோட்டமிட்டன எனினும் விமானங்கள் அப்பகுதியில் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் சேதவிபரங்கள் பற்றிய தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (யோ)

## மீட்புநிதி சேகரிப்பு

பிரதேச ரீதியாக இன்று பின்வரும் இடங்களில் மீட்பு நிதிசேகரிப்பு இடம்பெறவுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

வலிகாமம், வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு காலை 11-00 மணி தொடக்கம் 12-00 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயம்.

தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம். 3-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

தென்மராட்சி பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

தவறான ஊசி பிரயோகம்

## யாழ். இளைஞர் ஜேர்மனியில் மரணம்

(வடமராட்சி)

ஜேர்மனி நாட்டில் 'ஹனல்' நகரில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த இளம் குடும்பத் தலைவர் ஒருவருக்கு தவறுதலாக வேறு ஊசி மருந்து பயன்படுத்தப்பட்டதால் அவர் மரணமானார்.

இது பற்றி மேலும் தெரிய வருகையில், குடும்பத்துடன் ஏழு வருடங்கள் அங்கு தங்கியிருந்த திரு. கே. கே. ராஜ் என்பவர் சுகவீனமுற்றதாகவும் அதனையடுத்து ஏழு மாதங்கள் சம்பந்தப்பட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும், இறுதியில் கிளினிக்குக்கு வந்து போகும்படிவிடுவிக்கப்பட்டார் என்றும், கிளினிக்குக்கு சென்ற இவருக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## முறைசாராக் கல்விப் பிரிவு தொழிற்றிறன் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்வித்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் வரும் மேமாதம் முதல் பல பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இப்பயிற்சிநெறிகளில் இணைய விரும்பும் மாணவர்கள் மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்பத்திரங்களையும் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் கல்விப்பணிப்பாளர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களைக் கோட்டக் கல்விப் பணிமனைகளிலும் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது,

# இராணுவ முகாம்களில் உசார் நிலையில் படைகள்

## புலிகள் தாக்கலாம் என அச்சம்

பூநகரி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள இராணுவத்தினர் உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்முகாம்களை புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் நிலவுவதே இந் நடவடிக்கைக்குக் காரணம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் இரு இராணுவ முகாம்கள் யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கு தடையாக அமைந்திருப்பதால் அவற்றைத் தாக்க விடுதலைப் புலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## அன்னைபூபதி 5-ம் ஆண்டு நினைவுநாள் உணர்வு பூர்வமாக ஆரம்பம்

தமிழீழத்தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்கள் நேற்று தமிழீழத்தின் அனைத்துப்பகுதிகளிலும் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது.

குடா நாட்டின் பல பகுதிகளில் தியாகச்சுடர் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்களில் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மலர்கள் தூவி அணையாத தீபம் ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

மேலும் குடா நாட்டின் பிரதான வீதிகள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் எழுச்சியூட்டும் கோஷங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் சிவப்பு, மஞ்சள் வர்ணத்திலான தோரணங்கள் வீதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

## யாழ். நூல்நிலையத்திற்கு நிதிஒதுக்கியது தெரியாதாம்

யாழ்ப்பாண பொது நூல் நிலையத்திற்கு ஜனாதிபதி நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்ட விவகாரம் தமக்குத் தெரியாது என்றும், எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு நூல்நிலையத்திற்கு தற்காலிக புனரமைப்பிற்காக ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா புனர்வாழ்வுப் பகுதியின் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கிறிஸ்டி சில்வா நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

## கைது

திருச்சியில் ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர் ஒருவர் தமிழக பொலீசாரினால் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து போலித் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ படக்கசட்டுக்கள்பங்கஸ், தூசி படிந்துள்ளதா? மேலும் படிந்து பழுதடைய முன் அதற்கென தயாரிக்கப்பட்ட கருவி மூலம் சிறந்தமுறையில் துப்புரவு செய்து கொள்ள வீடியோஸ்ரார் இல 7/6, பிறவுண் வீதி,முதலாம் லேன், யாழ்ப்பாணம். (4481)

### விற்பனைக்கு

இரண்டுபேடும், ஒரு சேவல், மூன்று வான் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. செல்வக்குமார், சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர் வடக்கு. (சி/6225)

### 5-3-93 சனிமாற்றம் 14.4.93 செவ்வாய் மாற்றம் 1.6.93 வரை வியாழவக்கிரம்

நூலாசிரியர் சத்திய தாஸனின் எண்ஜோதிட அட்டவணையும் ரூ. 8-50 விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், சஞ்சிகைகளுக்கு இ ராசதுரை (ஸ்ரோர்ஸ்) இருபாலைச்சந்தி. (4515)

### காசநோய் தடுப்பு

[யாழ்ப்பாணம்]

தற்போது வேகமாக பரவிவரும் காசநோய்க்கான தடுப்பூசி ஏற்றுவது தொடர்பான கருத்தரங்கு மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் டாக்டர் சீ. இந்திரராஜா தலைமையில் நடைபெறுகின்றது.

இதில் சுமார் ஐம்பத்திஐந்து குடும்பநலஉத்தியோகத்தரும், ஆரம்ப சுகாதார உத்தியோகத்தரும் கலந்து கொண்டுள்ளனர். [நி]

### தெற்போற்சவம்

[வடமராட்சி]

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த தெற்போற்சவ திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். [யோ

### பாலர்பாடசாலை ஆசிரியர் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றால் நடாத்தப்படும் அனைத்துப் பாலர்பாடசாலைகளின் ஆசிரியர்களையும் நாளைக்

---

# மஹாபொல புலமைப் பரிசில் வைபவம் 1993

1991-92 கல்வியாண்டில் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் 1993-03-27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் காலை 9. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்டத்திலிருந்து சகல பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட மஹாபொல புலமைப் பரிசில் பெறும் மாணவர்களும் கலந்து பரிசில்களைப் பெறுமாறும், அவர்களது பெற்றோர்கள் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்


கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வைபவம் வவுனியாவில் நடைபெறும். அதேபோல் மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான வைபவம் மன்னாரில் நடைபெறும்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும்

199-03-18 (சி/6223)

---

# ஆறாம் மாத கண்ணீர் அஞ்சலி



---

# முக்கிய அறிவித்தல்

21-03-93 ஞாயிறன்று நடைபெறவிருந்த சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் 25-03-93 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். பழைய நிகழ்ச்சித் திட்டமே அடிப்படையாய் அமையும் என்பதை அறியத் தருகிறோம். ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்.

அ. நவரத்தினராசா, தலைவர்
க. சிவானந்தமூர்த்தி, செயலாளர்
ந. நடேசன் பொருளாளர்

சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [4527]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## குமாரசாமி அன்னம்மா

பிறப்பு 18-06-1926 — இறப்பு 18-02-1993

எங்கள் அருமைத்தாயே: எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, அன்போடும், பண்போடும் பாசத்தோடும் எங்களை வளர்த்தீர்! காலமும் காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்தாலும் உங்கள் நினைவு என்றென்றும் நிலைத்து நிற்கும்..

உங்கள் ஆத்மா சாந்தி பெற, என்றும் பிரார்த்திக்கின்றோம்.

மரணச் செய்திகேட்டு சமுகமளித்தோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி!

உங்கள் பிரிவால்வாடும்
மகள் மருமகன்
பேரப்பிள்ளைகள் சகோதரி
உற்றார், உறவினர்

188, கண்டி வீதி
சாவகச்சேரி.
(4513)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



---

# வாழ்த்துகின்றோம்

திருமதி கணபதிப்பிள்ளை
அவர்களின்

கனிஷ்ட புத்திரி
**கமலாவதியின்**

மங்கல நீராட்டு விழா இனிதே சிறப்புற, உடல், உள நலம் பெற்று சகல செளபாக்கியங்களுடனும் வாழ இனிது வாழ்த்துகின்றோம்.

மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.
- கருணா - பரமேஸ்வரி குடும்பத்தினர்.

(சி/6221)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1993-03-20

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். கரவெட்டிப் பகுதியில் பயிற்சியின்போது எதிர்பாராத விதமாக குளத்தில் மூழ்கியதில் எமைப் பிரிந்த

**ரசீந்தன்** (பசுபதி சதீஸ்குமார் - அண்ணாசிலையடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி, யாழ்.

1986 ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய

**டொனா** (பாக்கியநாதன் போல்ராஜ் - பாவற்குளம், வவுனியா)

1988 ஆம் ஆண்டு மட்டு - புதூர்ப்பகுதியில் தேச விரோத சக்திகளால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட

**யூலி** (யூலியன் - மட்டு)

திருக்கோணமலை - வில்கம் விகாரைப் பகுதியில் பேரூந்து ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு அம்பாறையில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த

**ஜோண்சன்** (பா.சதீஸ்குமார்-பெரியஉப்போடைமட்டு)

1991 ஆம் ஆண்டு மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் சிறிலங்காப் படைமுகாம் தகர்ப்பில் இரண்டாம் நாள் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**லெப். கலா** (வசந்தி இராசரத்தினம் - கடற்கரைச்சேனை, மூதூர், திருமலை)

**சசிக்குமார்** (சின்னத்தம்பி பத்மநாதன் - 7ஆம் வட்டாரம், குமுழமுனை, மணலாறு)

**திவாகரன்** (டானியல் ஜோசப்சாள்ஸ் - தாமரைக்குளம் அடம்பன், மன்னார்)

**ஆனோல்ட்** (கிருஷ்ணபிள்ளை குகன் - பறவைக்கொத்தான் வீதி, இறம்பைக்குளம் வவுனியா)

**சூரி** (வன்னி)

(வடமராட்சி தாக்குதல் தளபதி)

**மேஜர் ரஞ்சன் / சித்தப்பா** [செல்வநாயகம் தயாளன் - தம்பசிட்டி, பருத்தித்துறை]

**கப்டன் மொறிஸ்** [சண்முகம் தவராசா - இடைக்குறிச்சி, வரணி கொடிகாமம்]

**லெப். ஜோனி** [சத்தியவான் சக்திவேல் - புலோலி தெற்கு. பருத்தித்துறை]

**லெப். நாதன்** [தியாகராசாசிவானந்தன்-இத்தாவில், சதாபுரம், பளை]

**லெப். தர்சன் / புலவர்** [யோகசாமி செந்தூரன்-

காலை பத்து மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## பனையால் வீழ்ந்தும் பிழைத்தார்

[வடமராட்சி]

தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் சுமார் 44 அடி உயரப் பனைமரத்திலிருந்து விழுந்து தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

இச்சம்பவம் அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோவிலடிப் பகுதியில் நிகழ்ந்தது.

இராசு லக்ஷ்மிகாந்தன் (வயது 40) என்ற தொழிலாளியே இவ்வாறு விழுந்து தப்பிக் கொண்டவராவார்.

## நூற்றாண்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் நூற்றாண்டு விழா இவ் வருடமாகும். இதனையொட்டி வைத்தியசாலையின் நூற்றாண்டு விழாவை இவ் ஆண்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

## சிறுவர் கல்வி, கலை பொருட்காட்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பாலர் ஆசிரியர் சங்கம் நடாத்தும் சிறுவர் கல்வி, கலைப் பொருட்காட்சி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இன்று 20 ஆம் திகதி பருத்தித்துறை பாலர் ஆசிரியர்சங்கத் தலைவி செல்வி கௌரி கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.



பிறப்பு:- 24-07-1971 இறப்பு:- 24-09-1992

## குலசிங்கம் யோகசந்திரன்

[இந்திரன்]

திதி:- 20-03-1993

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பெரிய நாவலடி,
கொடிகாமம்.
(4479)

– குடும்பத்தினர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 – 12 – 1930



மறைவு: 24 – 03 – 1990

## அமரர் தம்பிப்பிள்ளை பூபாலசிங்கம்


திதி:- 20-3-1993

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
அப்பா ஆறாது எம் துயரம்

அன்புடன் நினைவு கூரும்

தபாற்கந்தோர் அருகாமை,
அச்செழு, நீர்வேலி.
(4521)

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## செல்வி துஷாந்தி பஞ்சாட்சரலிங்கம்

[முன்னாள் யா / நல்லூர் சென். பெனடிக் பாடசாலை மாணவியும் யா / இந்து மகளிர் கல்லூரி மாணவியும்]

மலர்வு: 17 - 09 - 1981 உதிர்வு: 01 - 04 - 1992

திதி: 20 - 03 - 1993

அம்மா சாந்தி எங்கள் மனதில்
நிறைந்தவளே நீ சென்று ஓராண்டு
சென்றதம்மா ஆனால் ஓராயிரம்
ஆண்டுகள் போல் இருக்குதம்மா
பரத நாட்டியம் ஆடும்போது உனது
உடன் பிறந்தவளுடன் சேர்ந்து
ஆடுவாய் உங்கள் நாட்டியத்தை
கண்டு கண் இதழ் மூட மறந்திடுவோம்
ஆனால் நீ உன் அழகான விழியை
மூடிவிட்டாயம்மா நீ எங்களை விட்டு
மறையவில்லை எங்கள் நினைவுகளில்
எங்கள் இதயங்களில் என்றுமே நீ
ஒளிவிளக்காய் பிரகாசிப்பாய்

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா,
அக்கா, தம்பிமார்,
உறவினர்கள்.

ஆ. பஞ்சாட்சரலிங்கம்
கமலேஸ்வரி களஞ்சியம்
49, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

[4526]

லெப். தர்சன் / புலவா [யோகசாமி செந்தூரன்- சிறீதரன் வீதி, வல்வெட்டித்துறை]

லெப். சோமன் [விநாயகமூர்த்தி இராஜேந்திரன் - கல்வயல், சாவகச்சேரி]

2 ஆம் லெப் ரஞ்சித் தாத்தா [கதிர்காமு குணபாலசிங்கம் - பேராலை, பளை]

2ஆம் லெப். அன்ரனி [துரைச்சாமி அகிலன் -முள்ளானை, இளவாலை, யாழ்.]

2ஆம் லெப். சதா (மேரிகியூரா தேவராசா - சந்தி ஒழுங்கை, நறுவிலடி - வல்வெட்டித்துறை)

2ஆம் லெப். அம்பி (நாகலிங்கம் கனகரஞ்சன் - புத்தூர் கிழக்கு - யாழ்.)

2 ஆம் லெப். காந்தராசா (நாகராசா ஜெயக்குமார் - புதுவளவு, பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறை)

சிவசங்கர் (அடைக்கலமுத்து இராஜேந்திரகுமார் - சூரியவெளி, நாவாந்துறை - யாழ்.)

மரியநாயகம் (கனகரத்தினம் சின்னத்துரை - 1-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்.)

டெனின் (வெற்றிவேல் ஞானரூபன் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை - யாழ்.)

சிறி (தங்கரட்ணம் நந்தகுமார் - சூராவத்தை, சுன்னாகம் - யாழ் )

விஷ்ணு (கனகரத்தினம் நித்தியானந்தம் - வியாபாரி மூலை - பருத்தித்துறை)

அனித்தா (உதயரஞ்சனி வைரமுத்து - காளிகோவிலடி, கொக்குவில் கிழக்கு - யாழ்.)

கஜா (பவானி தவநாயகம் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்.)

கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

சுடர் (சீனிவாசகம் சிதம்பரப்பிள்ளை- 3-ம் வாய்க்கால், பரந்தன் - கிளிநொச்சி)

திருமலை பொன்னன் காணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

2 ஆம் லெப். பிரதீப் (செல்லத்துரை ராஜேஸ்வரன் - 3-ம் கொலனி, மூதூர் - திருமலை)

1992 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ''ஒப்பறேசன் கஜபாரா'' நடவடிக்கையின்போது நிகழ்ந்த கடும் சமரில் வீரச்சாவெய்திய -

லெப். தங்கன் (நடராசா விமலநாதன் - கோப்பாய் - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6231)

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

# போசாக்கின்மையும் அதன் பாதிப்புக்களும்

உடலின் வளர்ச்சிக்கும், நாளாந்த செயற்பாடுகளுக்கும் உணவு அவசியமானது. போதிய அளவு உணவின் கூறுகள் கலங்களுக்கு சென்றடையாவிட்டால், போசாக்கின்மை உண்டாகும். உணவின் எந்தக் கூறில் குறைபாடு இருக்கிறது என்பதைப் பொறுத்து போசாக்கின்மையின் அறிகுறிகள் தோன்றும். காபோவைதரேற்று அல்லது மாப் பொருள் (கலோரி அல்லது சக்தி) குறைபாடிருந்தால், மெலிந்து காணப்படுதலும், புரதக்குறைபாடு ஏற்படின் வளர்ச்சிக் குறைபாடு காணப்படுதலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இரும்பு குறைபாடு இருப்பின் குருதிச்சோகையும், உயிர்ச்சத்து ஏ குறைபாடிருப்பின் மங்கலான வெளிச்சத்தில் பார்வை குறைதலும், உயிர்ச்சத்து வி குறைபாடிருப்பின் கடைவாயில் புண்கள் போன்ற அறிகுறிகள் காணக் கூடியதாக இருக்கும்.

எமது நாட்டில் காணப்படும் போசாக்கின்மைக்குக் காரணம் வறுமை மாத்திரம்தான் என்று சொல்ல முடியாது. ஒரு சில சந்தர்ப்பங்களில் வறுமை காரணமாக இருப்பினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அறியாமையே அடிப்படைக் காரணம்.

கர்ப்ப காலத்தில் அதிகம் சாப்பிடுவதால் குழந்தை பெரிதாகி பிரசவத்தின்போது சிக்கல் ஏற்படும் என்ற மூடநம்பிக்கையினால் பல கர்ப்பவதிகள் தமது நாளாந்த உணவைக் குறைத்துக் கொள்கின்றார்கள். இதனால் பிறப்பு நிறை குறைந்த குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார்கள். பிறப்பு நிறை குறைந்த பிள்ளை மற்றைய குழந்தைகளை விட வளர்ச்சியிலே பின் தங்கி இருப்பார்கள். அத்துடன் தாய் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதால் குழந்தைக்கு பால் சுரத்தலும் குறைவாக இருக்கும்.

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் மிகவும் அவசியம். 6-8 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போசாக்கின்மை ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் தாய்ப்பாலின்மையே. தாய்ப்பால் சுரக்காமல் விடுவதற்கான முக்கிய காரணங்களுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. குழந்தை பிறந்து பல மணித்தியாலங்களுக்கு தாய்ப்பாலை ஊட்டாதிருத்தல், குழந்தை பிறந்து எவ்வளவு கெதியாக தாய்ப்பாலை ஊட்டுகிறோமோ அவ்வளவு விரைவாகபால் சுரக்கும். குழந்தைக்கு ஊட்ட ஊட்ட பால் அதிகமாகச் சுரக்கும். பால் முழுமையாகச் சுரக்க 7 நாட்கள் எடுக்கும். அதுவரை புட்டிப் பால் கொடுக்க ஆரம்பிக்கக் கூடாது.

2. போத்தலில் பால், தண்ணீர் முதலியவை கொடுத்தல்; தண்ணீர் கொடுக்க வேண்டுமானால் போத்தல் பாவிக்காது கரண்டி மூலம் கொடுக்க வேண்டும்.

3. தாய் அதிகமான ''சரக்கு'' சாப்பிட்டு தண்ணீர் குடிக்காதிருத்தல்; ''சரக்கு'' தயாரிப்பிற்கு பாவிக்கும் சீரகம், கொத்தமல்லி முதலியவற்றில் இரும்புச்சத்து நிறைய உண்டு. ஆனால் நிறையச் சாப்பிட்டால் புண் விரைவில் மாறும் என்ற மூட நம்பிக்கையில் அதிகமாக சாப்பிடுகிறார்கள். அதிகமாக சாப்பிட்டு விட்டுத் தண்ணீரைக் குடித்தால் வயிற்றோட்டம் உண்டாகுவதால் தண்ணீரை குடிப்பதில்லை. இதனால் வரட்சி உண்டாகி பால் சுரப்பது குறைந்துவிடும். 'சரக்கு' சாப்பிடலாம் அதைஅளவோடு சாப்பிட்டு நிறைய நீர் குடியுங்கள் பால் சுரக்கும்.

4. பால் சுரக்காதிருப்பதற்கு இன்னொரு காரணம் கர்ப்ப காலத்தில் மார்பகங்களை கவனியாதிருப்பதாகும். சிகிச்சை நிலையங்களுக்கு ஒழுங்காக சென்று மருத்துவ மாதர்களின் அறிவுரைகளுக்கு அமைய நடந்தால் பால் சுரப்பதில் தடங்கல் ஏற்படாது.

6-8 மாதங்களின் பின் குழந்தைகளுக்கு போசாக்கின்மை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் உப உணவுகள் கொடுக்காதுஇருப்பதுதான். 6 மாதத்தின் பின் குழந்தைக்கு தாய்ப்பால் மாத்திரம் போதாது. 3 ஆம் மாதத்திலிருந்து, சிறிய அளவில் கஞ்சி, முட்டை, மரக்கறி அவித்த நீர் [சூப்], தேசிக்காய் கரைத்த நீர் முதலியவற்றைகொடுக்கத் தொடங்கி 6-7 மாதங்களில் சோறு, உருளைக்கிழங்கு, இடியப்பம் முதலியவற்றை கொடுக்க தொடங்க வேண்டும். இவற்றை கொடுத்தால் போசாக்கின்மை ஏற்படாது.

கர்ப்பகாலத்தில் பெரும்பாலான தாய்மார்களுக்கு ஏற்படுவது குருதிச்சோகை. கருவில் உள்ள குழந்தை ஒட்டுண்ணியாக இருந்து, தனது வளர்ச்சிக்காக தாயிடமிருந்துதனக்கு வேண்டியதை உறுஞ்சி எடுப்பதால் தாய்க்கு இந்நிலை ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு தாய்அதிகம் செலவிட வேண்டியதில்லை. சிகிச்சை நிலையங்களில் கொடுக்கப்படும் ''சத்துக்குளிசைகளை'' ஒழுங்காக விழுங்கி, தினமும் இலைவகைகளை தமது உணவில் சேர்த்து உண்டால்குருதிச் சோகையை தவிர்க்கலாம்.

இன்றைய அரசியல் நிலையில், உணவுப் பற்றாக்குறையும், வருமானமின்மையும் போசாக்கின்மைக்கு ஒரு காரணமாக இருப்பினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போசாக்கின்மைக்கு காரணமாக இருப்பது, அறியாமையும் மூட நம்பிக்கைகளுமே. இவற்றை நாம் எதிர்த்துப் போராடினால், மூன்றில் இரண்டு பகுதியினரிடையே உள்ள போசாக்கின்மையை போக்கலாம்.

**டாக்டர். ந. சிவராஜா**
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

# விளையாட்டு

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை வருடாந்த ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

❋

யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை மல்லாகம் சிறிபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (11)

❋

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி புதன் கிழமை பிற்பகல் 2மணிக்கு கொத்தணி அதிபர் திரு. த. கந்தையா அவர்களின் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (86)

❋

மட்டுவில் மகாவித்தியாலத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறும். (86)

❋

புற்றளை மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் அப்பர் இல்லம் (நீலம்) 295 புள்ளிகளைப் பெற்று 1ஆம் இடத்தையும், சுந்தரர் இல்லம் (பச்சை) 256 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தையும் சம்பந்தர் இல்லம் (சிவப்பு) 247 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தையும் பெற்றன. இவ் விளையாட்டுப்போட்டி புலோலி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு. இ. ஞானசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. (25)

❋

யாழ். கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான தடகள விளையாட்டு விழாவும் பரிசளிப்பும்பருத்தித்துறைஹாட்லி கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் திரு. சி. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. (25)

❋

சுன்னாகம்ஸ்கந்தவரோதயா கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இளையதம்பி இல்லம், மாணிக்கம் இல்லம், சுப்பிரமணியம் இல்லம், நாகநாதர் இல்லம், கந்தையா இல்லம் என்பன முறையே 1ம், 2ம், 3ம், 4ம், 5ம் இடங்களைப் பெற்றன. (09)

❋

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி திங்கள் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி கி. வீரசிங்கம் தலைமையில் நடைபெறும். [86]

❋

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி முதல்வர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறும் இப்பரிசளிப்பு விழாவில் முன்னாள் கல்லூரி அதிபரும், தற்போதைய மருதனாமடம் இறையியல் கல்லூரிப் பதிவாளருமான திரு. எ.கதிர்காமர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி மகிழ்மலர் கதிர்காமர் கல்வி, சமூக மற்றும் விளையாட்டுக்களில் சிறந்து விளங்கியவர்களுக்கு சிறப்புப் பரிசில்களை வழங்கவுள்ளார். [05]

❋

விளையாட்டுத்துறை அமைச்சின் 11 ஆவது சுற்றுப்போட்டியில் பின்வரும் விளையாட்டுக்களுக்கானவிண்ணப்பங்களை மாவட்ட விளையாட்டு அதிகாரி, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும்.

## மாகாணசபை முறையை குழப்ப முயற்சிக்கின்றனர்

1988இல் மாகாணசபை முறையை எதிர்த்தவர்கள் இம்முறை மாகாணசபை தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றனர். மாகாணசபை நடவடிக்கைகளை குழப்புவதே இவர்களின் நோக்கமாகும் என ஜனாதிபதி பிரேமதாச தென்னிலங்கையில் பொதுக் கூட்டம் ஒன்றில் கடந்தபுதன் கிழமை பேசுகையில் தெரிவித்தார்

### ஜனாதிபதி தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன ஆரம்பத்தில் மாகாணசபையை எதிர்த்தன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குறைந்த விலையில் பொருள்கள் விற்பனை

வடமராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ள பருத்தித்துறை, புலோலி, மருதங்கேணி, உடுப்பிட்டி, கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கட்டைவேலி சங்கம் சன்லைட் சவர்க்காரம் 8 ரூபா 50 சதமாகவும், சீனி கிலோ 45 ரூபாவாகவும், வொண்டலைட் சவர்க்காரம் 7 ரூபாவாகவும், சம்போ பைக்கற் 5 ரூபாவாகவும், சிகரட் 3 ரூபா 75 சதமாகவும் மற்றைய பொருள்களும் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. (யோ)

## மக்கள் மயமாக்கல் புலிகளுக்கு ஆதரவாகவல்ல

(கொழும்பு)

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை மக்கள்மயமாக்குவத

வாணிப அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

### பண்டிதர் வகுப்புகள்

பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் ஆகிய வகுப்புகள் வெகுவிரைவில் தென்மராட்சிக் கல்விக்கோட்டத்தினால் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாலை வேளைகளிலும் விடுமுறை நாட்களிலும்நடாத்தப்படவுள்ளன. மேற்படி வகுப்புகளில் சேர்ந்து கற்க விரும்புபவர்கள் 25-03-1993க்கு முன்பு கோட்டத்திற்குநேரில் வந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் கேட்டுக் கொள்கின்றார்.

## ஐ. தே. கவில் இணைவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 12 முக்கிய உறுப்பினர்கள் ஆளும் ஐ. தே. கவில் இணைந்துள்ளனர். இவர்கள் முஸ்லிம் காங்கிரஸில் தமது பதவிகளை ராஜினாமா செய்த பின்னர் ஐ. தே. கவில் இணைந்து கொண்டனர்.

## விவசாய உ. வி. கூ. ச. சமாசம் பெயர் மாற்றப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுசங்கங்களின் சமாசம் 'யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, இம்மாதம் 5ஆம் திகதி தொடக்கம் புதிய பெயர் நடைமுறையில் இருப்பதாகவும் இப்பெயரிலேயே தொடர்பு கொள்ளுதல், காசோலை வரைதல் போன்றவற்றை மேற்கொள்ளுமாறும் மேற்படி சமாசம் அறிவித்துள்ளது. யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்னால் இச்சமாசம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (22)

## வெளிநாட்டுத் தபால்களுக்கு விநியோகத்தில் முன்னுரிமை

[யாழ்ப்பாணம்]

கப்பலில் வந்துள்ள தபால் பொதிகளைத் தரம் பிரித்து வழங்கிவரும் யாழ். பிரதம தபாலகம் முதலில் வெளிநாட்டுத் தபால் பொதிகளையே சகல தபாலகங்களுக்கும் வழங்கி வருவதாக வடமாகாண தபால் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பலமுறை வந்த தபால் பொதிகளில் பலமுறை வெளிநாட்டுத் தபால்கள் குறைவாகவும், சிலவேளைகளில் முற்றாக வராமலும் இருந்தமை தெரிந்ததே, இதைக் கருத்திற் கொண்டே வெளிநாட்டுத் தபால்களை முதலில் விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இம்முறை கூடுதலான தபால் பொதிகள் வந்துள்ளமையால் தபால்களை முற்றாக விநியோகித்து முடிக்க குறைந்தது மூன்று நாட்களுக்கு மேல் செல்லுமெனவும் சுன்னாகம், சாவகச்

## பிறந்தநாள் வாழ்த்து

## புலிகளுக்கு ஆதரவாகவில்லை

(கொழும்பு)

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை மக்கள்மயமாக்குவதனால்இராணுவத்தினர் அதைரியப்படுத்தப்படுவார்கள் என்று கூறுவதில் உண்மையில்லை. மக்கள் மயமாக்கலை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான செயல் என்று கூறுவதில் அர்த்தமில்லை என வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை அரசு மக்கள் மயமாக்குவது புலிகளுக்கு சாதகமானது என முன்னதாகப்பேசிய சுதந்திரக்கட்சி எம்.பி. நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

## நூறு குடும்பங்களுக்கும் வீடமைப்பு நிவாரணம்

யாழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வறிய மக்களுக்கு வீடமைக்க வழங்கப்பட உள்ள நிவாரணப் பணம் இம்முறை நூறு குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளதாக யாழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் திரு. சத்தியராஜ் கடந்த திங்கட்கிழமை சென்றோக் பாடசாலையில் நடைபெற்ற சமூக அபிவிருத்திகுழு அமைத்தல் தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேலும் சென்ற வருடம் இந்நிவாரணத்துக்கு சிபார்சு செய்யப்பட்டு சில காரணங்களுக்காக வழங்கப்படாமல் போன குடும்பங்களும் இம்முறை தகுதியானவர்கள் என நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களையும் இம்முறை பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார் (17)

## யாழ். மாவட்டத்திற்கு உரவகைகள் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு அண்மையில் 'குமாரி' கப்பல்மூலம் எடுத்து வரப்பட்ட 2000 பொதி அமோனியம் சல்பேற், 2000பொதி ரீ.டி. எம்.கலவை ஆகிய உரவகைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன. அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபரின் சிபார்சின் மூலம் அமோனியம் சல்பேற் 665 ரூபா விலையிலும், ரீ. டி. எம். கலவை 720 ரூபா விலையிலும் விநியோகிக்கப்படுவதாகவும், உரவகைகள் தேவைப்படும் சங்கங்கள் தமக்கு எவ்வளவு தொகை தேவை என்ற விபரத்துடன் விண்ணப்பிக்கலாம் என்றும் மேற்படி சமாச பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்

### வீட்டு நாய்களும் அழிக்கப்படலாம்

அனுமதி பெற்று வீடுகளில் வளர்க்கப்படுகின்ற வீட்டு நாய்கள் வீதிகளில் திரிவது கண்டால் அவையும் கட்டாக்காலி நாய் பிடிப்பவர்களால் பிடிக்கப்படுமென யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி வளர்ப்பு நாய்கள் அவிழ்த்து விடப்படும் பட்சத்தில் அவைகள் வீதியில் நடமாடும் போது அவ்வழியே செல்பவர்களைக் கடிக்கலாம் மேலும் வீதிவிபத்துக்கள் ஏற்பட அடிகோலலாம் எனசில விடயங்களைக் கருத்தில் கொண்டு இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## பிறந்தநாள் வாழ்த்து



### ★ செல்வி பிரதீபா ★

இராமநாதபுரம் 5-ம் யூனிற் இல-332ஐச் சேர்ந்த ரவிராஜ்-சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரதீபா 20-03-93 இன்று தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் மிக விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அதே இடத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, ஸ்ரீ சித்தப்பா, ரூபி அத்தை, மற்றும் சுவிஸில் வசிக்கும் செல்வம்மாமா, சுகி அத்தை, அனோ மச்சான், ரூபன் சித்தப்பா, கொழும்பில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, பூட்டன், வரதன் மாமா, ரஞ்சி அன்ரி, குகன் மாமா, ஜேர்மனி சந்திரன் மாமா, சுவிஸ் துசி மாமா, மற்றும் யாழ்ப்பாணத்திலிருக்கும் பூட்டியும், பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[சி- 6206] —குடும்பத்தினர்

வந்துள்ளமையால் தபால்களை முற்றாக விநியோகித்து முடிக்க குறைந்தது மூன்று நாட்களுக்கு மேல் செல்லுமெனவும் சுன்னாகம், சாவகச்சேரி தபாலகங்களுக்கு தனித்தனி பொதிகள் வந்துள்ளதுடன் ஏனைய தபாலகங்களுக்கான பொதிகள் யாழ். பிரதம தபாலக பொதியுடன் சேர்த்து பொதி செய்யப்பட்டு வந்துள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

### நிதானமற்றவிலையில் அரிசி விற்பனை

[யாழ்ப்பாணம்]

வர்த்தகத் திணைக்களத்தின் கிளைகள் சிலவற்றில் அத்தியாவசிய உணவுப்பொருளான அரிசி நாளுக்குஒருவிலை விற்பதாகப் பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.

சுண்டுக்குளி வர்த்தகத் திணைக்களக் கிளையில்நேற்று முன்தினம் 'உ' அட்டைச்கு ரூபா 17.50 க்கு விற்கப்பட்ட ஒருகிலோ கோறா அரிசி நேற்று அதே கிளையில் கிலோ 21 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதே வேளை, யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஒரு கிலோ அரிசி வறுமை நிவாரண விலையில் ரூபா 17.50 க்கு விற்கப்படுகிறது. இதே கிளைகளில் ஒரு கிலோ அரிசியின் வழமையான 'உ' அட்டை விற்பனை விலை ரூபா 21.50 ஆகும்.

வர்த்தக திணைக்களம் எழுந்தமானமாக அத்தியாவசியப் பொருளின் விலையை நிர்ணயிப்பது குறித்து பாவனையாளர் குழப்பமடைந்துள்ளார்கள்.

### வருடாந்த கூட்டம்

யாழ். மாநகரசபை ஊழியர் கூட்டுறவு கடனுதவு சிக்கன சங்க 29 ஆம் வருடாந்த பொதுக்கூட்டம் திங்கள் காலை 11.00 மணிக்கு மாநகர சபை அலுவலகத்தில் நடைபெறும்.

❋

யாழ். கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு.வி மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட விளையாட்டு அதிகாரி, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும்.

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் விளையாட்டுக்கள்: கூடைப்பந்தாட்டம் ஆண் / பெண், ஹொக்கி, கிரிக்கெட் [தோல்பந்து], சடுகுடு

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




செல்வன்

### திவ்யகுமார் சந்திரகுமார்

தெணியம்பை யாழ்வீதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சந்திரகுமார் - வளர்மதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் திவ்யகுமார் தனது முதலாவது பிறந்த தினத்தை 20.03.1993 (இன்று) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை ஐயா, அம்மா, அப்பா, அம்மம்மா, பெரிய மாமா, மாமி, (காண்டீபன்- உமா) சின்னமாமா, மாமி, (முரளி-மாலதி) அத்தான்மார், (திபாகர்-சசிகுமார்) மச்சாள் (திவ்வியா), அன்ரிமார், மதுமதி, இந்துமதி மற்றும் உறவினர்கள் வேவில் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

தெணியம்பை, யாழ்வீதி,

வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்.

(4524).

## தோட்டங்களில் திருட்டு அதிகரிப்பு

(தொல்புரம்)

பண்டத்தரிப்பு வடலியடைப்புப் பகுதியில் பயிர்செய்கைத் தோட்டங்களில் அண்மைக் காலங்களில் இராத் திருடர்களின் அட்டகாசம் ஆரம்பித்துள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது: அண்மையில் இரவு ஏழு மணியளவில் வடலியடைப்புக் கலைவாணி வீதியைச் சேர்ந்த க. நவரெத்தினம் (வயது 50) என்பவரினது தோட்டத்தில் களவாக வெற்றிலை பிடுங்கிக் கொண்டு நின்ற திருடர்களை பிடிப்பதற்கு எத்தனிக்கையில் திருடர்கள் தப்பியோடிவிட்டனர். இதுபோன்றுமரக்கறித் தோட்டங்களிலும் இத் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகவும், இதனால் தோட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்படையும் நிலை உருவாகியுள்ளதெனவும் தெரியவருகிறது. (41)

## பனம் தொழில் வல்லுனர்களுக்கு பனை அபிவிருத்திச் சபையில் நியமனம்

ஆராய்ச்சிகள் சம்பந்தமாக கள், பதநீர் இறக்குவது தொடர்பாகவும், பனையில் இருந்து பாளை, நொங்கு, பனம்பழம் ஆகியவற்றை வெவ்வேறு காலங்களில் ஆராய்ச்சிக்காக பறிப்பதற்காகவும் மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பதநீர் உற்பத்தியில் பயிற்சி வழங்குவதற்காகவும் பனை அபிவிருத்திச் சபையில் மேற்படி வல்லுனர்களை நியமிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் குறைந்தது 8-ம் வகுப்புவரை கல்வி கற்றிருக்கவேண்டும். வயது 35 க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 30-03-93-ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ

பொது முகாமையாளர்,<br>
பனை அபிவிருத்திச் சபை,<br>
தேசிய வீடமைப்புச் செயலகம்,<br>
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஏற்கனவே இத்துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்<br>
[சி-6232] பனை அபிவிருத்திச் சபை.

## எயர்லங்காவில் திருட்டு

[கொழும்பு]

எயர்லங்கா களஞ்சியத்திலிருந்து பல வருடங்களாக திருட்டுப் போன பொருள்கள் தொடர்பாக மாவத்தமையைச் சேர்ந்த தமிழ்வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருடப்பட்ட பெருந்தொகையான சமையலறை உபகரணங்கள், பீங்கான் கோப்பைகளைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இந்த வர்த்தகர் சிங்கள இளைஞருடன் இணைந்து இத்திருட்டை மேற்கொண்டு வந்தார். திருட்டுப் போன பொருள்கள் வாரியப்பொல, குருநாகல் பகுதிகளிலுள்ள விடுதிகளிலிருந்து கைப்பற்றப்பட்டது. சந்தேக நபரே இவற்றை விற்றதாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

## சீனி அனுப்பி வைக்க அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு கூடுதலான சீனியை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த பலநாட்களாக யாழ் மாவட்டத்தில் சீனிக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுவது தெரிந்ததே. நேற்று முன்தினம் பருத்தித்துறை[illegible] 'வாதுவ' கப்பலில் [illegible] றிக்தொன் சீனிமட்டுமே [illegible]ப்பிவைக்கப்பட்டுள்ளது.

இச்சீனி பொதுமக்களுக்கு விநியோகிக்கப் போதுமானதான இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி கூடுதலானசீனியை உடன் அனுப்பிவைக்குமாறு அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று அவசரசெய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்,

## 2-வது நினைவு அஞ்சலி



### வீரவேங்கை கஜா

[தவநாயகம் பவானி]

வீரப்பிறப்பு<br>
16-10-1971

வீரச்சாவு<br>
20-03-1991


நினைவுடனே வணங்குகின்றோம்

புன்னாலைக்கட்டுவனில் புகழ்பெறவே நீ பிறந்தாய்<br>
அன்னாளில் நல்ல கலைகளில் உயர்ந்து நின்றாய்<br>
சின்னாளில் விடுதலை பெறுவதற்கே நீ துடித்தாய்<br>
பொன்னான உன்தன் எண்ணமெல்லாம நிலைக்குமம்மா<br>
என்னாளில் உந்தன் நினைவை நாம் மறப்போமிங்கே<br>
இன்னாளில் நாமும் நினைவுடனே வணங்குகின்றோம்

20-03-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில உற்றார், உறவினர், சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

என்றும் நினைவில் நிற்கும் அன்புள்ள<br>
அப்பா, அம்மா, தம்பிமார்,<br>
தங்கைமார், அண்ணர்மார், உற்றார்<br>
நீர்வேலி வடக்கு. (4522) உறவினர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில்<br>
8-3-72

தாயகமண்ணில்<br>
20-3-91

### கப்டன் மொறிஸ்

(சண்முகம் தவராசா)

சுதந்திரம் வேண்டி நடாத்திடும் யாகத்தில்<br>
விருப்புடனே வேங்கையென நீ எழுந்து களம்சென்றாய்<br>
தமிழ் மானம் காத்திடவே போர் புரிந்தாய்<br>
வீரப் புயம் கொண்ட எங்கள் கப்டன் மொறிஸ்<br>
களம் பல கண்டு சினம் கொண்டு சீறி எழுந்தாய்<br>
சிங்கள இராணுவத்தை சிலாபத்துறைதனில்<br>
ஒரு நொடிப் பொழுதினில் வென்று மாவீரனாய்<br>
மலர்ந்திட்டாய்<br>
உம் கல்லறை மலர எம் கண்ணீர் மாலைகளினால்<br>
அர்ச்சிக்கின்றோம்.

நீ தான் இன்றில்லை உன் நினைவலைகளாவது எம்முடன் மிஞ்சட்டுமே ஈராண்டு ஆனாலும் மாறாது உன் நினைவு ஆறாது நம்மனசு.

மொறிஸ் வீதி<br>
இடைக்குறிச்சி, வரணி.

உன்பிரிவால் துடித்து துயருறும்<br>
அப்பா, அம்மா,<br>
சகோதரர்கள், சகோதரிகள்,<br>
உறவினர்கள், நண்பர்கள்.

(4489)

## ஏப்ரலில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]


முறைசாராக் கல்வி ஆண்டிறுதிப் பரீட்சை - 1992 ஏப்ரல் மாத நடுப் பகுதியில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் தொழில் திறன் பயிற்சி, குறுங்கால தொழில் திறன் பயிற்சி, எழுத்தறிவூட்டல் பயிற்சி, வளர்ந்தோருக்கான ஆங்கிலக் கல்வி ஆகிய வகுப்புக்களில் பயின்ற பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை தாம் கற்ற பாடசாலை அதிபரிடம் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். கல்வித் திணைக்கள முறைசாரா கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். [பா]

## அலுவலகம் திறப்பு

பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசத்திற்கான அலுவலகம் எதிர்வரும் 22-ம் திகதி புலோலியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (25)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு<br>
2[illegible]-06-197[illegible]

வீரச்சாவு<br>
20-03-1991

### 2-ம் லெப். அன்ரனி

[துரைச்சாமி அகிலன்]

[கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்]

20.3. 1991 அன்று சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது நேரடி மோதலில் வீரச்சாவடைந்த 2-ம் லெப் அன்ரனிக்கும் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய வீர வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.

கொக்குவில், - குடும்பத்தவர்கள்.<br>
(கொழும்புத்துறை) (4483)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 2-ம் லெப். சின்னக்கோபு

[செந்திவடிவேலு சிறிதரன்]

வல்வெட்டித்துறை

தாயின் மடியில்: 02-09-1966

தமிழீழ விடிவில்: 06-04-1986

திதி: 20-03-1993

சிங்களவர் படையால் தமிழர் துயர்கண்டு
குமுறிக் கொதித் தெழுந்து
நான்காம் முகாமினிலே நயமாக பயிற்சிபெற்று
தாயகம் திரும்பி வந்து
தொண்டை மானாற்றில் தொல்லைதரும் படைகளினை
முகாமினுள் முடங்கவைத்து சுற்றிவர வேலியிட்டாய்
சுரங்கம் குடைந்து சென்று தாம்போதி தகர்த்திட்டாய்
எதிரிப் படைகளினை அக்கரையில் நிற்கவைத்தாய்
ரோந்து வந்த வாகனத்தை உந்துகணை செலுத்தி
உடனே அழித்திட்டாய்
பாதகரை அழிக்கவெனப் பதுங்குகுழி வெட்டுகையில்
பறந்து வந்த எறிகணைதான் பட்டதுவோ!
ஏழாண்டு கழிந்தாலும் ஏங்குதையா எம்மனது
பல்லாண்டு போனாலும் உன்நினைவு எம்முடனே

குடும்பத்தினர்

'இலக்குமி வாசா'
கே கே. எஸ். றோட்,
வல்வெட்டித்துறை.
[4512]

தற்போதைய முகவரி:
'பொன்னா வில்லா',
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி



தாயக மண்ணில்
மலர்வு
23-10-1968

தமிழீழ மண்ணில்
உதிர்வு
20-03-1991

## வரவேங்கை டெனின்


(வெற்றிவேலு ஞானரூபன்)

புளியங்கூடல் தன்னில் புகழுடனே தோன்றி
புலியாக மாறிவிட்ட மாவீரனே ஞானரூபா
தமிழீழம் தனைக்காக்கத் தன்னுயிரை ஈந்து விட்டாய்
தமிழர்கள் மனந்தனிலே தக்க இடம் பிடித்தாய்
அனலிலே உன்மேனி அந்தோ வெந்ததடா
ஆனாலும் உன்வீரம் அவனியே புகழுதடா
வேங்கையாய் நீ மாறி பல வீரச்செயல் புரிந்தாய்
வெறியர் குடியிருக்கும் பல முகாம்களை வீழ்த்தினாய்
நீ தொட்ட துப்பாக்கி உனைத்தேடி ஏங்குதே
நீ கொண்ட தாகம் தீர்க்க அது இன்னும் இயங்குதே
சிந்தித்து செயல்பட்டாய் தியாகச் செம்மலாய் ஒளி
விட்டாய்
சிங்கள வெறியர்களை சிலாவத்துறையினிலே தகர்த்து
விட்டாய்
ஈராண்டு கடந்தாலும் உன் இனிய முகம் மறக்குமோ
இனிய எம் டெனினே உன்பிரிவை இதயம் தான்
பொறுக்குமோ!

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களினது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

23, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (4520)

உன்பிரிவால் நினைந்துருகும்
– குடும்பத்தினர்,



## அமரர் திருமதி நடராசா சிவபாக்கியம்

## மறைவு: 17. 02. 1993

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும், அந்தியேட்டிக் கிரியைகளும் 19. 03. 93 அன்று கொழும்பில் நடைபெற்றன.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி/6233)

மகள், மருமகன் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

சிந்தனைக்கு

எப்பொழுதும் பிறரைப் புண்படுத்தாதவன் என்று சொல்வது, கனவானுக்கு இலக்கணம் வகுப்பதாகவே அமையும்.

— ஜான் ஹென்ரி நியூமேன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20 – 03– 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# விளையாட்டுக்கள் வினையாகலாகாது

கடந்த சில வாரங்களாக பாடசாலைகளுக்கிடையிலான சினேகபூர்வ எறிபந்தாட்டப் போட்டிகள் (கிரிக்கெட்) எமது மண்ணில் நடந்து வருகின்றன. இவை இன்றைய போர்க்காலச் சூழலிலும், மனத்தைரியத்துடன் எதையும் தாங்கி, இம்மண்ணில் எதையும் சாதிக்க முடியும் என்று இளையவர்கள் அறை கூவுவதைக் காட்டுகின்றது.

இதேபோன்று, வருடம்பூராவும் உதைபந்தாட்டம், எறிபந்தாட்டப் போட்டிகள் போன்ற விளையாட்டுகள் பாடசாலை மட்டத்திலும், விளையாட்டுக்கழகங்கள் மட்டத்திலும் நடைபெற்றன. இவ்வாறான போட்டிகளைக் காண்பதற்குநெருக்கடியின் மத்தியிலும், மக்களும் பெருமளவில் கலந்துகொள்கின்றார்கள். அத்தோடு, இன்றைய சூழ்நிலையில், மக்களின் ஓர் உணர்வுபூர்வமான பொழுதுபோக்கு அம்சமாகவும் இவ்விளையாட்டுகள் அமைந்துள்ளன.

இதேவேளை, இவ்விளையாட்டுகள் ஓர் ஆரோக்கியமான சமுதாய வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் புரிந்துணர்விற்கும் வழிகோலவல்லன/வழிகோலுகின்றன. ஆனால், சிலவேளை இவ்விளையாட்டுப் போட்டிகள் நோக்கத்திற்குமாறான விளைவுகளை ஏற்படுத்தி வருவதும் உண்டு. இவ்வாறான சிலசம்பவங்கள் அண்மையில் அதிகரித்து வருவது வேதனையளிப்பதாகவுள்ளது.

கடந்த காலத்திலும், இப்போட்டிகளின்போது விளையாட்டின் நோக்கத்திற்கும், பண்புகளுக்கும் அப்பால்பட்டு பல மனவருத்தம் அளிக்கக்கூடிய செயல்கள் இடம்பெற்றிருந்தமை சகலரும் அறிந்தவைதான். இவ்வாறான சம்பவங்கள் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில், மிகவும் குறைந்தளவிலேயேஇடம்பெற்றுவந்தன. ஆனால், விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் மைதானத்திற்கு உள்ளும், அதன் தொடராக தெருக்களிலும், கிராமங்களிலும் மோதல்கள் இடம்பெற்று பலத்த காயங்களுக்கு பலர் உள்ளாக வேண்டியநிலை ஏற்பட்டுவந்ததும் உண்டு. இதன்தொடராகக் காவல்துறைவரை விளையாட்டு வீரர்கள் செல்லவேண்டி வந்ததும் உண்டு.

ஆனால், இவ்வருடம் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளின் போது, விரும்பத்தகாத பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது. விளையாட்டு வீரர்கள் தாக்கப்படுவது, இரசிகர்கள் ஒருவரோடு ஒருவர் மோதுவது, நடுவர்

தெலுங்கு கங்கைத்திட்டம் தொடர்பாக

# காங்கிரஸ் - அ. இ. அ.தி. மு. க. மாநிலங்களவையில் மோதல்

(டில்லி)

தமிழகத்திற்கு குடிநீர் கொண்டு வரும்தெலுங்கு கங்கைத் திட்டம் விரைவில் பூர்த்தி அடைவதற்கு ஏதுவாக தமிழகம் மற்றும் ஆந்திர மாநில முதல்வர்களின் கூட்டம் ஒன்றை மத்திய அரசு கூட்ட வேண்டும் என்று நேற்று முன்தினம் மாநிலங்களவையில் பேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திருமதி ஜெயந்தி நடராஜன் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அ. இ. அ. தி. மு. க வின் குழுத்தலைவர் ஜி. சுவாமிநாதன் தெலுங்கு கங்கைத் திட்டம் தாமதமடைவதற்கு காரணம் மாநிலத்தில் ஆட்சிபுரியும் காங்கிரஸ் கட்சிதான் என்று குற்றம் சுமத்தியதைஅடுத்து மாநிலங்களவையில் வாக்குவாதம் ஏற்பட்டது இந்த வாக்குவாதத்தின் போது அ.இ.அ.தி.மு.கவிற்கு ஆதரவாக பாரதீய ஜனதாக் கட்சியும் பேசியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பேரவையின் நேரத்தை காங்கிரஸ் வீணடிப்பு

-ஜெயலலிதா கண்டனம்

[சென்னை]

தமிழக சட்டப் பேரவையில் பேரவையின் நேரத்தை வீணடிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்பட்டுவருவதாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம்தெரிவித்தார்

கடந்த புதன்கிழமை பாபர் மசூதி பிரச்சினை பற்றி தாம் குறிப்பிட்டமைக்கு கண்டனம் தெரிவித்து வெளியேறிய காங்கிரஸ் நேற்று முன்தினம் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப முற்பட்டதைக் கண்டித்து இதனைத் தெரிவித்த ஜெயலலிதா மேலும் கூறுகையில்;பேரவைத் தலைவர் நேரத்தை வீணடிக்கும் இத்தகைய செயல்களுக்கு இடமளிக்கக் கூடாது என்றும்தெரிவித்தார்.

## சென்னை நகரில் ரோந்து தீவிரமானது

(சென்னை)

பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து கரையோர மாநிலமான தமிழ் நாட்டிலும் பாதுகாப்புத்தீவிரமாக்கப்பட்டுள்ளது. தமிழக சிறப்புப் பொலீஸ் படையின் ஏழு பிரிவுகளும், மத்திய ரிசேர்வ் பொலீஸ் படையின் ஒரு பிரிவும் சென்னை நகரில் ரோந்துப் பணியில் மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நகரில் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள், நபர்கள், பொருள்கள் பற்றி உடனுக்குடன் பொலீஸாருக்குத் தகவல் தரும்படி தமிழகப் பொலீஸ் இயக்குநர் ஸ்ரீபால் மக்களைக் கோரியுள்ளார்.

ஐ-நா. அதிகாரிகளின்

## இந்திய விஜயம் ரத்து பாதுகாப்பின்மை காரணம்

[டில்லி]

பம்பாயிலும், கல்கத்தாவிலும் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்களை அடுத்து அமெரிக்கா வெளியிட்டுள்ள அச்சத்தின் காரணமாக வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வரவிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அதிகாரிகளும் தமது புதுடில்லி விஜயத்தைக் கைவிட்டுள்ளனர்.

புதுடில்லியில் இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகங்களும் இந்த விஜயங்கள் இரத்துசெய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தி செய்திகள் வெளியிட்டுள்ளன. அத்துடன் புதுடில்லியில் இருக்கும் ஐக்கிய நாடுகள் அலுவலகப் பணியாளர்கள் வெளிக்கள வேலைகளுக்காகச் செல்வதும் பாதுகாப்பு காரணங்களுக்காக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## காங்கிரஸ் கட்சியினர்மீது மதுரையில் கல்வீச்சு

குழாய்வரி, நிலவரி, மின் கட்டண உயர்வு என்பவற்றைக் கண்டித்து மதுரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய காங்கிரஸ்கட்சியினர் மீது சோடாப் போத்தல்கள் மற்றும் கற்கள் என்பன வீசப்பட்டன. இதனையடுத்து அவர்கள் சிலமணி நேரம் சாலை மறியல்லில் ஈடுபட்டனர்.

பி. ஜே. பி. ஆட்சியிலிருந்த

# நான்கு மாநிலங்களில் தேர்தல்உடனடியாகஇல்லை

(டில்லி)

பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சியிலிருந்த 4 மாநிலங்களிலும் தற்போது தேர்தல்கள் ஏதும் நடைபெறாது என மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவித்துள்ளார். இம்மாநிலங்களில் வகுப்புவாத தீவிரப்போக்கு தன்மை நீங்கும் வரை தேர்தல்கள் நடைபெறாது என அவர் இராஜ்ய சபாவில் கூறினார்.

இம்மாநிலங்களின் சட்டப் பேரவை அதிகாரங்களை ஜனாதிபதி பொறுப்பில் விடும் சட்டம் மீதான விவாதத்தின் போதே அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் மத்திய அரசினால் பி. ஜே. பி. ஆட்சியிலிருந்த உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், இமாசலப் பிரதேசம்,ராஜஸ்தான் மாநில அரசுகள் கலைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## தஞ்சாவூரில் கொள்ளை இலங்கை தமிழர் கைது

தஞ்சாவூரிலிருந்து சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது. பயணிகளிடமிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக தமிழக பொலீசார் இருவரை கைது செய்துள்ளனர் இது தொடர்பாக மேலும் நால்வர் தேடப்பட்டு வருவதாகவும் இவர்கள் மதுரை அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் என்றும் பொலீசார் தெரிவித்துள்ளனர்.

## இன்ரபோல் விஜயம்

(டில்லி)

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள இன்ரர்போல் பொலீஸ் குழு ஒன்று பம்பாய் வந்து சேர்ந்தது.

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் குழுக்களின் பணியை இணைக்கும் கடமையிலும் இன்ரர்போல் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அமெரிக்க தடய நிபுணர் ஒருவரும் நேற்று பம்பாய் வந்த சேர்ந்துள்ளார்

## கல்கத்தாவில் மேலும் பல வெடிக்காத குண்டுகள் மீட்பு

(டில்லி)

கல்கத்தாவில் போமோ பஜார் பகுதியில் செவ்வாயன்று குண்டுவெடிப்பு நேரிட்ட இடத்திலிருந்து மேலும் இருபத்தைந்து குண்டுகளைப் பொலீசார் கைப்பற்றியுள்ளனர். இந்த குண்டுகள் மீட்கப்பட்டபோது ஒரு குண்டு வெடித்தது என்றும், எனினும் எவரும் காயமடையவில்லை என்றும் மேலும் கூறப்படுகிறது.

இதேவேளை கல்கத்தா குண்டு வெடிப்பு தொடர்பாக முகமட் ரசீம் கான் என்னும் முஸ்லிம் இளைஞர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இக் குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை அறுபத்தாறாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழக மீனவர் ஐவரைக்காணவில்லை

தமிழகக் கரையிலிருந்து மீன்பிடிப்பதற்காக நேற்று முன்தினம் புறப்பட்ட ஐந்து மீனவர்கள் மீண்டும் திரும்பி வரவில்லை என்றும், அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் தமிழக மீன்பிடித்துறை அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

## கண்டவுடன்சுட உத்தரவு

(டில்லி)

கர்நாடக மாநிலத்தில் கண்டவுடன் சுடும் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அசம்பாவிதம் மற்றும் வன்செயல்களை ஏற்படுத்துபவர்களைக் கண்டவுடன் சுடும்படி கர்நாடக முதலமைச்சர் பிரகடனப் படுத்தியுள்ளளர்

## ஸ்கூட்டர் குண்டு பம்பாயில் வெடித்தது

பம்பாயில் நேற்று ஸ்கூட்டர் ஒன்றிலிருந்து சிறு குண்டு ஒன்று வெடித்தது. இதனால் எவரும் காயமடையவில்லையாயினும் மக்கள் மத்தியில் பீதிநிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் கல்கத்தா பகுதியிலும் வெடிக்காத நிலையில் 25 குண்டுகள் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக கல்கத்தா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

## நேற்றும் வெளிநடப்பு

தமிழக சட்டப் பேரவையிலிருந்து நேற்றும் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்பு செய்தனர். சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேசவிடாது தடுப்பதாக எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். தமிழக சட்டப் பேரவையில் ஜனநாயகம் செத்துவிட்டது, எதிர்க்கட்சியினரின் குரல் நசுக்கப்படுகிறது என்றும் அவர் ற்றஞ்சாட்டினார்.

# அ. தி. மு. க - காங்கிரஸ்

றது. விளையாட்டு வீரர்கள் தாக்கப்படுவது, இரசிகர்கள் ஒருவரோடு ஒருவர் மோதுவது, நடுவர்கள் தாக்கப்படுவது, அவமரியாதையாக ஒருவரோடு ஒருவர் பழகுவது, விளையாட்டிற்குரிய பெருந்தன்மைகளை இழந்துவிடுவது போன்ற சம்பவங்கள் இம்முறை சற்று அதிகமாகவே காணப்படுவதாகத் தெரிகிறது.

அவ்வாறு, விளையாட்டுகள் தமது குறிக்கோளை எய்தாது விடுமாயின், அது ஆரோக்கியமானதாக அமையாது. இப்போட்டிகள் மைதானத்தில் வீரர்களுக்கிடையே இருத்தலே அவசியம். இவை இரசிகர்களிடம் உணர்வு பூர்வமாக வருவதும் இயற்கையே. எனினும், இப்போட்டிகள் இவ்வாறான விரும்பத்தகாத நடத்தைகளை பாடசாலை மாணவர்களிடம் உருவாக ஏதுவாக இருப்பது கவலைக்குரியதாகும். இதில் விளையாட்டு வீரர்களாக இருந்தாலும் சரி, பாடசாலை மாணவர்களாக இருந்தாலும் சரி, இரசிகர்களாக இருந்தாலும் சரி பொறுப்புணர்வுடன் நடந்து விளையாட்டின் நோக்கத்தையும்,குறிக்கோளையும் காப்பாற்ற முன்வரவேண்டும்.

சிலவேளை, இவ்வாறான கண்டனத்திற்குரிய நடத்தைகள் சிலருக்கு ஒரு சிறிய விடயமாக, ஒரு பொழுதுபோக்கான காரியமாகக் கூடத்தெரியலாம். மேலும், இதற்கு யார் காரணம் ,ஏன் இப்படி நடைபெறுகின்றது என்பதுமகூட சிறிய விடயமாக இருக்கலாம். ஆனால், இது விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதாகவோ அன்றி, அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதாகவோ அமையப்போவதில்லை என்பதோடு, போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகளுக்கும், அவப்பெயர்களையே தேடிக் கொடுக்கக் கூடியவையாகும்.

இந்நிலையில், விளையாட்டை ஒழுங்குபடுத்துபவர்கள் இவ்வாறான மோதல்கள், சச்சரவுகள் போன்றவை தோன்றாது பாதுகாக்கவேண்டிய கடமைப்பாடு உடையவர்கள். தவறுகள் இடம் பெற்ற பின்னர், அதற்குக்காரணம் தேடாது,அல்லது இயலாமையை வெளிப்படுத்தாது இப்போட்டிகள் ஒழுங்காக நடைபெற சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டும். இந்நில்லையில்தான் வளர்ந்துவரும் இன்றைய தலைமுறையினர் தமது தவறை உணர்ந்து நடக்க உதவும். விளையாட்டுகள் வாழ்க்கையுடன் பிணைந்தது. இது மேலும் வளர்ந்துவர சகலரதும் ஆதரவு இந்நிலையிலேயே கிடைக்கும்.

நடத்திய காங்கிரஸ்கட்சியினர் மீது சோடாப் போத்தல்கள் ... னர்.

## தமிழ்மொழி அமுலாக்ககோரி தமிழ்நாடு அறிஞர்கள் பேரணி

தமிழ் நாட்டில் எல்லாத் துறையிலும் தமிழுக்கு முதலிடம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி அங்கு தமிழறிஞர்கள் நீண்ட பேரணி ஒன்றை நடத்தி வருகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையிலான ஆயிரம் கிலோமீற்றர் நடைப்பயணப் பேரணி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். கடந்த மாதம் 12 ஆம் திகதி இந்தப் பேரணி ஆரம்பிக்கப் பட்டது.

## பா.ஜனதா பேரணி நடந்தால் குண்டுகள் வெடிக்கலாம்

### சுவாமி ஆருடம்

(சென்னை)

பாரதீய ஜனதாக் கட்சியினர் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையன்று சென்னையில் நடத்த இருக்கும் பொதுக் கூட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டால் தமிழகத்திலும் குண்டுகள் வெடிக்கலாம் என்று ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் மாநில அரசு இந்தக் கூட்டத்தை ரத்துச் செய்ய உடன் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

## குண்டுவெடிப்புகளை தடுக்க விரிவான திட்டம்வகுப்பு

### உள்துறை அமைச்சர் ராஜேஷ் பைலட்

[டில்லி]

பம்பாயிலும், கல்கத்தாவிலும் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்கள் போன்ற சீர்குலைவு நடவடிக்கைகளைத் தடுக்க விரிவான திட்டமொன்றை அரசு வகுத்திருப்பதாக உள்துறைஇணைஅமைச்சர் ராஜேஷ்பைலட் கூறியிருக்கிறார்.

ராஜ்ய சபாவில் நேற்று கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி முன்னர் சமர்ப்பித்த அறிக்கைக்கு விளக்கம் அளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

## பா. ஜனதா - அ.தி.மு.க கூட்டணி ஏற்படவில்லை

பாரதீய ஜனதா கட்சிக்கும் அ. தி. மு. க விற்கும் இடையில் எந்தக் கூட்டணியும் ஏற்படவில்லை என முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டப்பேரவையில் தெரிவித்தார். சென்னையில் பி. ஜே. பி. பேரணி நடத்த அனுமதி கோரவில்லை, கூட்டம் நடத்தவே அனுமதி கோரியதாகவும் அவர் கூறினார்.

# குழாயடிச் சண்டை

## 2 வருடமர்மங்கள் வெளியாகின்றனவாம்

ராஜீவ்காந்தி கொலைக்கு இந்திரா காங்கிரசே காரணம் என தற்போது அ. தி. மு. க வின் முக்கிய உறுப்பினரும் தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சருமான செங்கோட்டையன் கூறியிருக்கின்றார் என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அமைந்தகரைப் பகுதியில் நடைபெற்ற தி. மு. க. நிதியளிப்பு கூட்டத்தில் பேசிய கருணாநிதி செங்கோட்டையன் சர்தாரணமான உறுப்பினரல்ல முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு நெருக்கமானவர் என்றும் சுட்டிக்காட்டினார்.

அ. தி. மு. க - காங்கிரசின் குழாயடிச் சண்டையினால் 2 வருடகாலமாக இருந்துவந்த மர்மங்கள் வெளிவருகின்றன என்றும் கருணாநிதி அப்போது குறிப்பிட்டார்.

# அமெரிக்க துருப்புகள் தங்க தென் கொரியா மறுப்பு

[சியோல்]

கொரியாத் தீபகற்பத்தில் பதற்றநிலையைத் தணிவிக்கும் நோக்கத்தோடு அமெரிக்க புது வரவுப் படைகளின் வசதியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளப் போவதில்லை என்று தென்கொரிய அரசு அறிவித்துள்ளது.

தென்கொரியாவின் வெளியுறவு அமைச்சர் சியோலில் செய்தியாளரிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது, அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடும் நோக்கம் எதுவும் தமது அரசிற்கு கிடையாது எனவும் வருடாந்தப் பயிற்சி ஒத்திகைகளுக்காக தென்கொரியாவிற்கு வந்துள்ள துருப்புகள் விரைவில் திரும்பிச்செல்லும் என்றும் தெரிவித்தார். தென்கொரிய அமெரிக்கப்படைகளின் கூட்டு ஒத்திகை நேற்றுமுன்தினம் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. கொரிய நீர்ப் பிரதேசத்தில் இருந்து விமானந்தாங்கிக் கப்பலான இன்டிப்பென்டன்டை விலக்கிக்கொள்ள அமெரிக்கா முன்வந்திருப்பது தெரிந்ததே.

## அணுசக்தி பொருட்கழிவு சேமிப்பிடம் சோதனை அனுமதிக்கு வ. கொரியாவிற்கு எச்சரிப்பு

[பொன்ல்ஜியாங்]

வடகொரியாவின் தலைநகர் பொன்ஜியாங்கிற்கு அருகே அணுசக்திக் கழிவுப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் இரு இடங்களை சோதனையிட அனுமதிக்குமாறு சர்வதேச அணுசக்தி ஸ்தாபனம் வடகொரியாவை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுள்ளது. வடகொரியா அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் சான்றுகள்இக்கழிவுப் பொருள்களை சோதனையிடுவதன் மூலம் பெறப்படலாம் என்று இத்தாபனம் நம்பிக்கை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த மாத இறுதிக்குள் குறிப்பிடப்படும் பகுதிகளைப் பார்வையிட சர்வதேச அணுசக்தி ஏஜென்சிக்கு அனுமதி கிடைக்காவிட்டால் இவ்விடயம் ஐ.நாவின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படலாம் என்றும் பொன்ஜியாங்கிற்கு எதிராகத்தடைகள் விதிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

ஈழநாதம்

# கல்கத்தா நகரில் மீண்டும் குண்டு வெடிப்புச் சம்பவம்

## நால்வர் பலி; 12 பேர் காயம்

(கல்கத்தா)

கல்கத்தா நகரில் நேற்று மீண்டுமொரு குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. கல்கத்தா நகரிலுள்ளஷெல்டா ரயில் நிலையத்தில் இடம் பெற்ற இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டார். 12 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமாலை இந்த ரயில் நிலையத்தில் ரயில் ஒன்றுவந்து நின்று அதிலிருந்து பயணிகள் இறங்கிக்கொண்டிருந்த போது குண்டு வெடித்தது. இனந் தெரியாதஒருவரின்சூட்கேஸை ரயில்வே ஊழியர் காவிச் சென்றபோது அதனுள் இருந்த குண்டு வெடித்தபோதே சூட்கேஸைக் காவிச்சென்ற ஊழியரும் பலியானார். காயமுற்றவகர்ளில்ஐவர்பொலீஸா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மத்திய கல்லூரி 354 ஓட்டங்களைப்பெற்றது

(யாழ்ப்பாணம்)

சென்றல் - சென்ஜோன்ஸ் 89-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி மிகவும் சிறப்பாக விளையாடி 9 விக்கட் நஷ்டத்திற்கு 354 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கெண்டது. இதில் கே. சுரேஸ் மிகவும் நிதானமாகவும் சிறப்பாகவும் விளையாடி 101 ஓட்டங்களைஆட்டமிழக்காமல் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு உதவியாக எஸ். அகாஸ் யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர் 78 ஓட்டங்களையும், கே.பிரகாஸ் 53ஓட்டங்களையும்பெற்றனர்.

சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய ப. சஞ்ஜிவ் 3 விக்கெட்டுக்களையும், ஜே. மதியழகன் 2விக்கெட்டுக்களையும், ம. காண்டீபன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். சென்ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் கொடுக்கப்பட்ட ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டி மீண்டும் இன்று காலை ஆரம்பமாகும். (42)

### கண்காட்சி

(குருநகர்)

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் கல்விக் கண்காட்சி இன்றும் தொடர்ந்து இடம்பெறும்.

கடந்த புதன்கிழமை காலை வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட மேற்படி கல்விக் கண்காட்சிகடந்தமூன்று தினங்கள் நடைபெற்றபோது பெரும் திரளான மாணவ - மாணவிகள் மற்றும் பெற்றோர், பொதுமக்கள் பார்வையிட்டிரு

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### லெப். சதா

(தேவராசா மேரிகியூரியா)

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 16-07-1970 | 20-03-1991 |

ஆண்டுகள் இரண்டு ஆகியும்
உன் நினைவுகள் எம்மனதை விட்டு
ஆறவில்லையம்மா

சிலாவத்துறையிலே நீ சிங்களவனைச்
சிதைத்த செய்தி கேட்டு - நாம்
எழுச்சி கொண்டோமம்மா

மறுகணம் உன் வீமரணச் செய்தி கேட்டு
நாம் வாடி வதங்கினோமம்மா
தமிழீழம் மலரும் நேரத்தில் - நீ உதிர்ந்தாயம்மா
உன் எண்ணம் மலர இன்னும் எத்தனையோ
சதாக்கள் மலர்ந்து கொண்டேயிருக்கும்
இதனால் உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

உன்பிரிவால் வாடும்
அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், உறவினர்கள்
நண்பர்கள்.

நறுவிலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
(சி-6237)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

# திருத்தி அமைக்கப்பட்ட அதிபர் சம்பள திட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்ட அரச ஊழியர்களின் சம்பள மாற்றியமைப்புத் தொடர்பான சுற்றறிக்கை இல. 37/92-ல் பாடசாலை அதிபர்களின் சம்பளத் திட்டம் பிழையாகவும், குறைவாகவும் குறிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொண்டு, அப்பிழையைத் திருத்தி அமைப்பதற்கு ஸ்தாபனப் பணிப்பாளர் நட்வடிக்கை எடுத்துள்ளதாகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இக்குறைபாட்டை இ. த. ஆ. சங்கத்தின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியமையை அடுத்து கல்வி உயர் கல்வி அமைச்சு ஸ்தாபனப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததன் விளைவாக தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தம் தொடர்பான சுற்று நிருபம் இவ்வாரம் சகல மாகாண, மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. சிறிசேனா அவர்கள் தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

அதிபர்கள் தொடர்பாக தற்போது திருத்தப்பட்ட சம்பளத் திட்டம் பின்வருமாறு:

| இலங்கை அதிபர் சேவை | தற்போதைய சம்பளத் திட்டம் | புதிய சம்பளத் திட்டம் |
|---|---|---|
| அதிபர் தரம்-1 | 33000-6 900-3 1200<br>42000 | 45120-6 1200-3 1560<br>57,000 |
| அதிபர் தரம்-2 | 31200-8 900-1 1200<br>39600 | 42720-8 1200-1 1560<br>53800 |
| அதிபர் தரம்-3 | 27000-4 600-9 900<br>37500 | 37200-4 720-9 1200<br>51120 |

### தவறான

ஊசி போடப்பட்டதாகவும் அவ் ஊசியில் வேறு மருந்து பாவிக்கப்பட்டதால் அவர் ஒரு மாதம் மயக்க நிலையில் இருந்து இறந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

இம்மரணத்துக்கு தாங்களே பொறுப்பு என ஏற்றுக் கொண்ட அவ்வைத்திய சாலை இவரது உறவினர்களை அல்லது பெற்றோரை அங்கே வருமாறும், அதற்கான ஏற்பாடுகளை அந்நாட்டு தூதுவராலயம் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற போதிலும் அவரது உடலை உறவினர்களிடம் எதிர்வரும் 22 ஆம் திகதியே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

### வீரவணக்க கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி வட்டத்தில் உள்ள மூன்றாம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களுடைய நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று இரவு 7 மணிக்கு பண்றித்தலைச்சி அம்மன் ஆலய முன்றலில் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழன் தலைமையில் இடம் பெறவுள்ளது. [86]

### யாழ்

கைகளை தாம் மேற்கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் இதற்காக நகரப்பகுதிகளில் பல குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார் (பா)

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், எதிர்வரும் 25-03-1993 (வியாழன்) காலை 10. 00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

நிர்வாகம்.

(4523)

## 51-ம் நாள் நினைவஞ்சலி

# மாகாண சபையை விட நல்லதொரு திட்டம் தேவை

### எதிர்க்கட்சி கூட்டு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வு திட்டம் அவசியம் என்றும் இதுமாகாணசபையை விட நல்ல ஓர் திட்டமாக அமைய வேண்டும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகளின் புதிய கூட்டு முன்னணி செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக இம் முன்னணி ஆராய்ந்ததாகவும் அதில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாவும் பத்திரிகையாளர் ஐவன்பி. பி. சிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக இக் கூட்டு முன்னணி முதல் தடவையாக கருத்து வெளியிட்டதாகவும், தமிழ் மக்களின் பிரச்சினை தேசிய பிரச்சினையாக தாம் ஏற்றுக் கொண்டதாகவும் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு உரிமைகளை வழங்கும் எந்தத் திட்டத்தையும் தாம் வரவேற்பதாகவும் கூறினார்.

அவர் மேலும் அவ்வாறு வழங்கப்படும்உரிமை மாகாண சபை முறையைவிட வேறு ஒரு நல்ல திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# இன்னுமோர் முன்னணி ஆணையாளரிடம் மனு

(கொழும்பு)

சிறிலங்காவில் மேலும் ஒரு எதிர்க்கட்சிகளின் கூட்டுக்குழு நேற்று தேர்தல் ஆணையாளரிடம் அங்கீகாரத்திற்காகவிண்ணப்பத்தைச் சமர்ப்பித்தது

மக்கள் விடுதலை அமைப்பு (ஜனதாவிமுக்திசங்விதானைய என்ற பெயரில்நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய ஜனநாயக முன்னணி, முஸ்லிம் கட்சி ஒன்று ஆகியன ஒன்றிணைந்தே தேர்தல் ஆணையாளரிடம் மனு சமர்ப்பித்துள்ளன.

இது தொடர்பாக நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில், இக்கூட்டு முன்னணியில் தமிழ்க் கட்சிகளையும் ஏனைய பல கட்சிகளையும் சேர்த்துக் கொள்வது தொடர்பாக தாம் ஆராய்ந்து வருவதாகவும் இன்றைய அரசின் கொள்கையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

### இராணுவம்

கள் முயலலாம் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### அம்புலன்ஸ்

மூலம்யாழ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். தெய்வாதீனமாக அம்புலன்ஸ் வண்டியில் சென்றோர் தப்பியுள்ளனர். [20]

### கைது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவரிடம் எந்தவித பயண ஆவணங்களும் இருக்கவில்லை என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்
விளையாட்டு மைதான விரிவாக்க
"3-ம் கட்டம்" நிதிசேகரிப்புக்கான

நாடக முத்துக்கள் மூன்று

இடம்:- கைலாசபதிகலையரங்கு
[யாழ். பல்கலைக்கழகம்]
காலம்:- 21 03-93 ஞாயிறு
காலை 9-00 மணி, மாலை 3-00 மணி
இரண்டு காட்சிகள்

1. குழந்தை சண்முகலிங்கம் நெறியாள்கையில்
பல்கலைக்கழக ஊழியர்கள் வழங்கும்
"உறவுகள்" [சமூக நாடகம்]
2. சுரேஸ் கனகராஜா [யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத்தலைவர்] நெறியாள்கையில்

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## 1. அறிவித்தல்:-

எதிர்வரும் முதலாந் தவணை விடுமுறைக் காலங்களில் மட்டும் 93 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களுக்கு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மேலதிக வகுப்பு வைக்கவிரும்பும் கல்வி நிறுவனங்கள் பாடரீதியான நேர அட்டவணையுடன் அந்த அந்தக் கோட்ட நிர்வாகத்திடம் முன்னரே அனுமதி பெற்றுக் கொள்ளவும். அனுமதி கோரும் கடிதம், நேர அட்டவணை ஆகியவற்றின் இரு பிரதிகள் சமர்ப்பிக்கவும்.

## 2. பெண் இலிகிதர்கள் தேவை:-

1. யாழ். மாவட்ட செயலகம்
2. யாழ். கல்விக் கோட்ட செயலகம்

மேலுள்ள எமது செயலகங்களில் கடமை புரிய க. பொ. த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. சம்பளம் நேரில் தெரிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி: 23-3-93. நேரடியாகவோ, கடித மூலமாகவோ சொந்தக் கையெழுத்தில் எழுதி விண்ணப்பிக்கவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

19, செம்மணி வீதி,
(கல்வித் திணைக்களத்துக்கருகாமை)
நல்லூர்.

[சி/6216]

---

# நன்றி நவில்கின்றோம்

## எஸ். சிவகடாட்சம் அன் கம்பனி

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள எஸ். சிவகடாட்சம் அன் கம்பெனியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தின் போது பல விதமாக முன்நின்று உதவி செய்த தமிழீழக் காவல்துறையினருக்கும், மற்றும் போராளிகளுக்கும், வர்த்தகர் சங்கம், வர்த்தகர்கள், பொதுமக்கள், யாழ். மாநகராட்சிமன்றம், யாழ். வர்த்தக புலனாய்வுச் சேவை ஆகியோருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளர்.

(4533)

---

கள் நடைபெற்றபோது பெரும் திரளான மாணவ - மாணவிகள் மற்றும் பெற்றோர், பொதுமக்கள் பார்வையிட்டிருந்தனர். (21)

---

## இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் மாணவர் அனுமதி 1993

இவ்விடயம் சம்பந்தமாக ஏற்கனவே பல்கலைக்கழக மானியஆணைக்குழுவினால் பத்திரிகைகளில் சில நாட்களுக்கு முன் செய்யப்பட்ட விளம்பரத்தினை தகைமை பெற்ற மாணவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் தற்போது இவ்விணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளுக்கான அனுமதிக்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர், நலச்சேவைகள் அலுவலகத்தில் உள்ளன. விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்பும் கல்வித்தகைமை பெற்ற மாணவர்கள் உதவிப் பதிவாளர்/நலச்சேவைகள் உடன் தொடர்பு கொண்டு அதற்கான ரூ. 35/- ஐ சிறாப்பரிடம் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களையும் உதவிப் பதிவாளர்/ நலச்சேவைகளிடமே கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் உதவிப் பதிவாளரிடம் கையளித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
1993-03-19 (சி/6235)


---

(4523)

நாவாகம்.

---

# 51-ம் நாள் நினைவஞ்சலி



## பூதர் சின்னராசா

பிறப்பு 18-12-1934

இறப்பு 29 01-1993

காங்கேசன் பதிதனிலே
''மடுராணி'' உரியவராம் - 'மரம்'
என்றால் மனம் நடுங்கும் - இப்போ
உந்தன் மனைவியவள் திலகவதியுடனே
ஏழு திலகங்களும்
நீயின்றித் துடிக்கின்றன!
பாசத்தொடு நேசமாக பலரை
கவர்ந்தீரே — பண்போடு
மாண்புடனே பாரினிலே நடந்தீரே!
சுற்றமெல்லாம் கலங்கி நிற்க
கூற்றன் உனைக் கவர்ந்தானோ!
கண்ணீர் பூக்கள் — உந்தன்
திருப்பாதங்களிற்கு காணிக்கையாய் ...

இன்று அன்னாரது சித்தன்கேணியிலுள்ள இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

மூளாய் வீதி,
சித்தன்கேணி.

(4530)

---

''உறவுகள்'' [சமூக நாடகம்]

2. சுரேஸ் கனகராஜா [யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத்தலைவர்] நெறியாள்கையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும்
''CHILD'S PLAY''

3. யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் வழங்கும் அழகு சுப்பிரமணியத்தின்
''WAKE UP MY BELOVED''

அனுமதிச் சீட்டுக்கள் மண்டப வாயிலில் விற்பனையாகும்.

பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

[சி/6230]

---

# ஸ்ரீதர் திரையரங்கில்...

# "தமிழோசை"

## தினசரி மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும்

காண்பிக்கப்படுகிறது

(சி-6149)

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 19-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8713

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3582, 28-0940, 26-3654, 28-8444, 41-7563, 24-5734, 26-0767, 26-4429, 27-5099, 41-2509, 24-1040, 28-6748, 41-9530, 71-4984, 24-5437, 42-3732, 26-9145, 26-1321 26-1724.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-5583, 42-1464, 41-9855, 41-2659, 41-1092, 41-8629, 40-4429, 40-7584, 24-0528, 26-4450, 26-3962, 26-9201, 26-8917, 26-1169, 27-3927.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது